**இணைப்பு 2**

**< PPR / ஸ்டேண்ட் அலோன்> -க்கான பிரீமியம் தொகை திருத்தம்**

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ-கள்)**

| எண் | கேள்விகள் | பதில்கள் |
|---|---|---|
| 1. | **ஏன் எனது பிரீமியம் தொகையைத் திருத்துகிறீர்கள்?** | முக்கியமாகப் பின்வரும் காரணிகளால் அதிகரித்து வரும் மருத்துவச் செலவுகளையும், அதிகரித்து வரும் மருத்துவ கிளைம்களையும் கையாள்வதற்கு, இந்தத் திருத்தம் அவசியமாகும்:<br><br>a) மருந்துகள் மற்றும் சிகிச்சைக்கான செலவு அதிகரிப்பு<br>b) புதிய மருத்துவ தொழில்நுட்பங்கள், மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கு மாறுதல்<br>c) உடல்நல ஆபத்துகள் அதிகரித்து, நீண்ட கால கவனிப்பு தேவைப்படுகின்ற நீரிழிவு, அதிக கொழுப்பு மற்றும் உடல் பருமன் போன்ற நாட்பட்ட நோய்கள் அதிகரிக்கின்ற வகையிலான வாழ்க்கை முறை மாற்றம்<br>d) சிறந்த மருத்துவ பராமரிப்புக்கான தேவை அதிகரிப்பு.<br><br>ஜூரிச் லைஃப் இன்சூரன்ஸ் மலேசியா பெர்ஹத்தில், உங்களுக்குப் பாதுகாப்பு கிடைப்பதோடு மட்டுமல்லாமல், உங்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் மருத்துவச் சேவைகளும், சிகிச்சைகளும் உங்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். |
| 2. | **எனது பிரீமியம் தொகையைத் திருத்துவதற்கான அளவுகோலை எவ்வாறு தீர்மானிக்கிறீர்கள்?** | திருத்தத்தைத் தீர்மானிப்பதில், உண்மையான மருத்துவச் செலவுகள், தற்போதைய மருத்துவப் பணவீக்கம் மற்றும் வாடிக்கையாளரின் பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகளை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கிறோம். உங்கள் பிரீமியம் தொகை எவ்வளவு உயரும் என்பது, உங்கள் வயது, தொழில், பாலினம் மற்றும் நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள குறிப்பிட்ட திட்டத்தைப் பொறுத்ததாகும். |
| 3. | **நான் எந்தவொரு கிளைமும் செய்யாத போது எனது பிரீமியம் தொகையில் ஏன் திருத்தம் செய்யப்பட்டுள்ளது?** | மருத்துவக் காப்பீடு என்பது, பிரீமியம் தொகை வசூலிக்கப்பட்டு, கிளைம்களுக்குப் பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஆபத்து-பகிர்வு என்ற அடிப்படையில் செயல்படுகிறது. அதன் காரணமாக, இதற்கு முன்பு நீங்கள் ஏதேனும் கிளைம் செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அனைத்துப் பாலிசிகளும் பாதிக்கப்படும். |
| 4. | **எப்போது எனது பிரீமியம் தொகை திருத்தப்படும்?** | உங்கள் அடுத்த பாலிசி வருடாந்திரத் தேதியில் உடனடியாக அல்லது <மறுவிலையிடல் தேதி> -க்குப் பிறகு புதிய பிரீமியம் தொகை நடைமுறைக்கு வரும். |
| 5. | **திருத்தத்திற்குப் பிறகு நான் வேறு ஒரு பிரீமியம் தொகையைச் செலுத்த வேண்டுமா?** | ஆம், உங்கள் கவரேஜ் தொடர்வதை உறுதி செய்வதற்காக கடிதத்தில் குறிப்பிட்டுள்ள புதிய பிரீமியத்தை நீங்கள் செலுத்த வேண்டியது கட்டாயமாகும். |

| | | |
|---|---|---|
| 6. | **வருங்காலத்தில் வேறு திருத்தம் செய்யப்படுமா?** | மருத்துவச் செலவுகளுக்கான எங்கள் மருத்துவத் திட்டங்களைத் தொடர்ந்து நாங்கள் மதிப்பாய்வு செய்து, எங்கள் மருத்துவமனை கூட்டாளர்களுடன் சேர்ந்து மருத்துவச் செலவுகளை சுறுசுறுப்பாகக் கையாள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். எதிர்காலத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால், அதை உங்களுக்குத் தெரிவிப்போம் |
| 7. | **திருத்தப்பட்ட பிரீமியத்தை செலுத்துவதைத் தவிர, எனக்கு வேறு என்ன விருப்பத்தேர்வுகள் உள்ளன?** | உங்கள் கவரேஜ் தொடர்வதை உறுதி செய்வதற்காக கடிதத்தில் குறிப்பிட்டுள்ள புதிய பிரீமியத்தை நீங்கள் செலுத்த வேண்டியது கட்டாயமாகும் இருப்பினும், பின்வரும் விருப்பத்தேர்வுகளைப் பரிசீலித்து, உங்கள் தற்போதைய மருத்துவத் தேவைகளை மறுமதிப்பீடு செய்வதற்கான விருப்பத்தேர்வு / மாற்று ஏற்பாடு உங்களுக்குக் கிடைக்கும்:<br><br>a) வாங்கும் திறன் ஒரு பிரச்சினையாக உள்ளது என்றால், உங்கள் மருத்துவத் திட்டம் மிகக் குறைந்த திட்ட நிலையில் இல்லை என்றால், அருகிலுள்ள ஜூரிச் கிளையில் ‘மாற்றுவதற்கான கோரிக்கைப் படிவத்தை’ பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம், குறைந்த கவரேஜ் கொண்ட மருத்துவத் திட்டத்திற்குத் தரமிறக்குவதை நீங்கள் தேர்வு செய்யலாம். ஆனாலும், உங்கள் மருத்துவக் காப்பீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு குறைந்த மருத்துவத் திட்டம் போதுமானதாக இருக்குமா என்பதை நீங்கள் மதிப்பாய்வு செய்ய வேண்டும்:<br><br>i. உங்கள் வெல்த் பிளானரைத் தொடர்பு கொள்ளுங்கள்; அல்லது<br>ii. 1-300-888-622 என்ற எண்ணில் ஜுரிச் அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது callcentre@zurich.com.my என்ற முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் செய்யுங்கள்; அல்லது<br>iii. உங்கள் அருகாமையில் உள்ள ஜுரிச் கிளைக்குச் செல்லுங்கள்<br><br>b) ஜூரிச் லைஃப் இன்சூரன்ஸ் மலேசியா பெர்ஹாத் வழங்கும் அதே போன்ற அல்லது மேலும் விரிவான மருத்துவக் காப்பீட்டை வழங்குகின்ற வேறு மருத்துவத் திட்டங்களுக்கு நீங்கள் மாறிக் கொள்ளலாம். ஆனாலும், நிலையான எழுத்துறுதி செயல்முறை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.<br><br>கவரேஜ் தொகை பாதிக்கப்படலாம் என்பதால், உங்கள் காப்பீட்டுப் பாலிசியில் நீங்கள் செய்ய விரும்பும் மாற்றங்களைப் பற்றி நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.<br><br>கிடைக்கும் சேவைகள் குறித்த கூடுதல் விவரங்களுக்கு, www.zurich.com.my -இல் எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது கூடுதல் விவரங்கள் மற்றும் உதவிக்கு உங்கள் வெல்த் பிளானரைத் தொடர்பு கொள்ளவும். அதற்குப் பதிலாக, உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் 1-300-888-622 என்ற எண்ணில் ஜூரிச் சேவை மையத்தையும் |

| | | |
|---|---|---|
| | | நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது callcentre@zurich.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். |
| 8. | **எனது மருத்துவப் பிரீமியம் தொகையைத் திருத்துவதற்கான நடைமுறை/ ஜூரிச்சிற்குத் திரும்ப அனுப்ப வேண்டிய ஆவணங்கள் என்ன?**<br><br>உங்களின் தற்போதைய பிரீமியம் செலுத்தும் முறையைப் பொறுத்து, புதிய தொகையை நாங்கள் வசூலிப்பதற்காக உங்கள் வங்கியில் கூடுதல் ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டியிருக்கும். மேலும் விவரங்களுக்கு கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும். | |

| தற்போதைய பேமெண்ட் முறை | நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? |
|---|---|
| கிரெடிட் அல்லது டெபிட் கார்டு, ஆட்டோ-டெபிட் (வரம்பு இல்லாத பரிவர்த்தனைத் தொகையுடன்) | உங்கள் தற்போதைய பேமெண்ட் ஏற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. |
| டைரக்ட் டெபிட் இ-ஆணை (பரிவர்த்தனைத் தொகை வரம்புடன்) | டைரக்ட் டெபிட்டிற்குப் பதிவு செய்தலை இந்த இணைப்பில் முடிக்கவும்:https://mya.zurich.com.my/AdhocPayment/Page/DirectDebitRegistration.aspx. இது உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து புதிய பிரீமியம் தொகையை நாங்கள் கழிப்பதற்கு உதவும்.<br><br>ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களுக்கு, உங்கள் வங்கிக் கணக்கு ஆட்டோ டெபிட்டின் அதிகபட்ச வரம்பானது புதிய பிரீமியம் தொகையை விடக் குறைவாக இருந்தால், பின்வரும் முறைகளில் அதிகபட்ச வரம்பை நீங்கள் மாற்றி அமைக்கலாம்<br>1) https://myzurichlife.com.my இல் உள்ள எங்கள் வாடிக்கையாளர் போர்ட்டலில் உள்நுழையவும் அல்லது<br>2) அதிகபட்ச வரம்பை மாற்றுவதற்கான புதிய படிவத்தை வங்கியிடம் சமர்ப்பிக்கவும். |
| வங்கிகளுக்கு நிலையான அறிவுறுத்தல்கள் | புதிய பிரீமியம் தொகையை எங்களிடம் செலுத்துவதற்கு, உங்கள் வங்கியில் ஏற்கனவே உள்ள நிலையான அறிவுறுத்தலை (அறிவுறுத்தல்களை) மாற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யவும். |